بسم الله الرحمن الرحيم

حجاب کا حکم (تمل)

# ஹிஜாப் எனும் மங்கையர்க்கவசம்

உருது மூலம்:-


**மௌலானா பீர் துல்ஃபிகார் அஹ்மத் நக்ஷ்பந்தீ, முஜத்தீதி [ரஹ்]**

حضرت مولانا پیر ذوالفقار احمد نقشبندی مجددی رحمۃ اللہ علیہ

தமிழில்:-

**மௌலவி ரியாஜுத்தீன் ஹஸனீ**



**தாருல் இஸ்லாஹ்**

(சமூக சீர்திருத்தப் பாசறை)

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | ஹிஜாப் எனும் மங்கையர்க்கவசம்!... |
| ஆசிரியர் பெயர் | : | மௌலானா மௌலவி ரியாஜுத்தீன் ஹஸனீ |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| பக்கம் | : | 77 |
| விலை | : | ரூ.35.00 |
| முதல் பதிப்பு | : | மே - 2026<br>துல் ஹிஜ்ஜா - 1447 |
| தட்டச்சு | : | மௌலானா, அப்துல் காதிர் ஹஸனீ, PH. 6385575974 |
| வெளியீட்டு எண் | : | 12 |

**நூல் கிடைக்குமிடம்:**

சமூக சீர்திருத்தப் பாசறை

(தாருல் இஸ்லாஹ்) பள்ளபட்டி.

செல்: 89256 11688

# பொருளடக்கம்

1. ஆசியுரை!....................................................................6

2. வாழ்த்துரை!................................................................9

3. ஹிஜாப் எனும் மங்கையர்க்கவசம்....................................11

4. மறைவிடத்தை மறைத்தலின் பின்னணி.............................13

5. ஹிஜாபின் பின்னணி ....................................................14

6. மறைவிடத்தை மறைப்பது மற்றும் ஹிஜாப் அணிவதற்கு மத்தியில் ஒப்பீடு.........................................................16

7. ஹிஜாபிற்கான வாதங்கள்..............................................17

8. புனித குர்ஆனுடைய ஆதாரங்கள்.....................................17

9. ஹதீஸ்களிலிருந்து பர்தாவிற்கான ஆதாரங்கள்..................26

10. பகுத்தறிவு வாதங்கள்...................................................32

11. எலுமிச்சை பழத்தைக் கண்டால் எச்சில் ஊரத்தானே செய்யும்.32

12. பணத்தை பாதுகாப்பதை விட மானத்தை பாதுகாப்பது மிக மேலானது.....................................................................34

13. கறிக்கே கவர் போடப்பட வேண்டுமானால் கன்கவர் உடலுக்கு திறை போட வேண்டாமா?.................................................36

14. ரோஷமுள்ளவன் தன்னவளை பிறருக்கு விருந்தாக்க மாட்டான்..37

15. அறிவை விட உணர்வுகளுக்கு முன்னுரிமை அளிப்பதால் பெண்கள் குறைமதியாளர்கள்..........................................38

16. இஸ்லாம் கூறக் கூடிய பர்தாவின் மூன்று நிலைகள்.......41

17. பர்தாவைத் தேர்ந்தெடுப்பதில் சிறந்த நிலை............................41

18. நடுத்தர நிலை.........................................................43

19. கடைசி நிலை ........................................................44

20. முகத்தை மூடுதல்....................................................45

21. புனித குர்ஆனிலிருந்து..............................................46

22. குற்றச்சாட்டுகள்:.....................................................50

23. குற்றச்சாட்டு: 1.......................................................50

24. குற்றச்சாட்டு:.2.......................................................51

25. குற்றச்சாட்டு : 3......................................................53

26. குற்றச்சாட்டு : 4......................................................54

27. குற்றச்சாட்டு: 5.......................................................55

28. குற்றச்சாட்டு: 6.......................................................55

29. குற்றச்சாட்டு : 7......................................................56

30. பர்தாவை துறந்ததால் ஏற்படக்கூடிய துயரமான விளைவுகள்.57

31. முட்டாளே! இதென்ன துரோகமா!....................................58

32. உன் தேவையைப் பூர்த்தி செய்ய நான் என்ன இயலாதவளா!..60

33. சொந்தங்களுக்குள் சொல்லிமாலாத கண்ணீர் கதைகள்..62

34. அத்தையின் அழகிய சுருட்டை முடி..............................62

35. சிற்றன்னையின் புன்னகை..........................................63

36. சகோதரியின் ஃபேஷன்...............................................63

37. தாயின் அலட்சியமான நடைமுறை...............................64

38. மகளும் விதிவிலக்கல்ல..............................................65

39. பர்தா அணியாமலிருப்பவர்கள் அனுபவிக்கும் தண்டனை.....68

40. விதவிதமான தண்டனைகள்.........................................68

41. உலகில் மறைக்காதவர் மறுமையில் மறைக்கமுடியாதவர்...70

42. விளைவு...................................................................71

43. பர்தா அணிவதன் பலாபலன்கள்....................................72

44. நாப்லுஸ் நகரத்து நற்பெண்கள்.....................................72

45. பர்தா பேணிவதினால் ஏற்பட்ட பரஸ்பர அன்பு..................72

46. மறைப்பதிலே தான் மனமகிழ்வுண்டு..............................73

47. அச்சமற்ற அற்புதமான வாழ்வு......................................74

# ஆசியுரை!

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

எல்லாப் புகழும் அகிலங்கள் அனைத்தையும் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்கே உரியது.

இஸ்லாம் என்பது மனித வாழ்வின் அனைத்துப் பக்கங்களுக்கும் வழிகாட்டும் ஒரு முழுமையான வாழ்வியல் நெறியாகும். அது மனிதனைப் புனிதப்படுத்துவதோடு, சமுதாயத்தில் ஒழுக்கத்தையும், அமைதியையும் நிலைநாட்டப் பெருமளவில் முக்கியத்துவம் அளிக்கிறது. அந்த வகையில், இஸ்லாம் பெண்ணினத்திற்கு வழங்கிய ஆகச்சிறந்த பாதுகாப்புக் கவசமே “ஹிஜாப்” என்னும் பர்தா முறைமையாகும்.

இன்றைய நவீன உலகம் சுதந்திரம் என்ற போர்வையில் ஒழுக்க விழுமியங்களைச் சிதைத்துக் கொண்டிருக்கும் வேளையில், பர்தாவின் முக்கியத்துவத்தை–குறிப்பாக முகத்தை மறைப்பதன் (நிஃகாப்) ஆன்மீக மற்றும் சமூகப் பின்னணியை – சரியான முறையில் விளக்குவது காலத்தின் கட்டாயமாகிறது. பர்தா என்பது வெறும் ஆடை மட்டுமல்ல; அது ஒரு பெண்ணின் கண்ணியம், இறை அச்சம் (தக்வா) மற்றும் அவளது சுயமரியாதையின் பிரகடனமாகும்.

இந்தப் புத்தகம், திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிகளின் (ஹதீஸ்) ஒளியில் பர்தாவின் சட்டங்களையும், அதன் உள்ளார்ந்த முக்கியத்துவத்தையும் மிக எளிய முறையில் விவரிக்கிறது.

அதே வேளையில், ஆன்மீக அலட்சியத்தினாலோ அல்லது தற்காலக் கலாச்சாரக் கவர்ச்சியினாலோ பர்தாவைத் தவிர்ப்பதால் சமுதாயத்திலும், தனிநபர் வாழ்விலும் ஏற்படும் ஆன்மீக வீழ்ச்சி மற்றும் ஒழுக்கக் கேடுகள் போன்ற தீய விளைவுகள் குறித்தும் மார்க்க வரம்புகளுக்குள் நின்று எச்சரிக்கிறது.

ஒழுக்கமும் நாணமும் இறைநம்பிக்கையின் (ஈமானின்) முக்கியப் பகுதிகள் என்பதை உணர்த்தி, நம் சமுதாயப் பெண்களைத் தவறான பார்வைகளிலிருந்தும், தீமைகளிலிருந்தும் பாதுகாக்கும் ஒரு வழிகாட்டியாக இந்நூல் அமையும் என நம்புகிறேன்.

இதனை ஒரு நற்செயலாக ஏற்று, மொழிபெயர்த்தோனுக்கும், வாசிப்போருக்கும் இரு உலகிலும் நற்பேறுகளை வழங்க வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். ஆமீன்.

இப்படிக்கு:

மௌலானா மௌலவி

**முஃப்தி ஷகீல் அஹ்மத் நக்ஷபந்தி**

துணை முதல்வர்

மத்ரஸா பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்,

வேலூர். செல்;9444453232

# دعائیہ کلمات بابرکات

## محبوب العلماء والصلحاء حضرت اقدس مولانا حافظ پیر ذوالفقار احمد صاحب نقشبندی مجددی مدظلہ العالی دامت برکاتہم

اللہ رب العزت کی سنت ہے کہ انبیاء کرام علیہم الصلوۃ والسلام کو اپنی قوم کی زبان میں مبعوث فرماتے ہیں. چنانچہ ارشاد باری تعالی ہے۔ ''وَمَآ أَرۡسَلۡنَا مِن رَّسُولٍ إِلَّا بِلِسَانِ قَوۡمِهِۦ''(اور ہم نے ہر رسول کو ان کی قوم کی زبان ہی میں مبعوث کیا ہے)

اس زمانے میں علاقائی زبان میں اصلاح وارشاد تصوف وسلوک نیز دین کے تمام ہی شعبوں کا لسانی وقلمی کام جلد اثر انداز اور قبولیت عامہ کا ذریعہ ہے۔

تمل زبان بہت قدیم زبان ہے، اس زبان کے بولنے والے دنیا کے مختلف ممالک میں کثیر تعداد میں آباد ہیں، تصوف کے علوم تقریبا یا تو عربی میں ہیں یا فارسی اور اردو زبان میں۔ موجودہ دور میں سلسلۂ عالیہ نقشبندیہ سے اللہ رب العزت نے سارے عالم میں خوب فیض جاری فرمایا ہے۔

نہ صرف تمل علاقے کے لیے بلکہ اس زبان کے بولنے والے سب ہی بندگان خدا کے حق میں خواہ وہ دنیا کے جس خطے میں ہوں یہ بڑی نعمت ہے کہ عزیز گرامی قدر مولانا مفتی شکیل احمد صاحب نقشبندی مجددی سلمہ زید مجدہ اپنی مجالس میں اس فقیر کے طویل خطبات سے اہم اہم مضامین ونکات کا انتخاب کرتے ہیں اور انہیں بزبان تمل ترجمہ کر کے مختصر ومفید اور جامع انداز میں رسائل کی شکل میں طبع کروا کر ہزاروں کی تعداد میں عام کرتے ہیں، رمضان المبارک میں دوران اعتکاف ان مرتب شدہ رسائل کی مستقل تعلیم ہوتی ہے، الحمدللہ ہزاروں کا مجمع ان رسائل سے استفادہ کر رہا ہے۔

اللہ رب العزت سے دعا ہے کہ عزیز موصوف کی اس محنت کو شرف قبولیت بخشے اور دارین میں نفع ونجات کا ذریعہ بنائے۔آمین

فقیر ذوالفقار احمد نقشبندی مجددی رحمتہ اللہ علیہ

کان اللہ لہ عوضًا عن کل شیئٍ

## வாழ்த்துரை!

மஹ்பூபுல் உலமா வஸ்ஸுலஹா ஹஜ்ரத் அக்தஸ் மௌலானா ஹாபிழ் ஃபீர் ஜுல்ஃபிகார் அஹ்மத் ஸாப் நக்ஷ்பந்தி, முஜத்திதீ ﵀ அவர்களின் பரக்கத் பொருந்திய துஆவின் வார்த்தைகள்.

நபிமார்களை அவர்களின் சமூக மக்கள் என்ன மொழி பேசுகிறார்களோ அதே மொழியைப் பேசுபவர்களாக அனுப்புவது அல்லாஹ்வுடைய சுன்னத்தாகும். இதையே எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا أَرْسَلْنَا مِنْ رَّسُولٍ إِلَّا بِلِسَانِ قَوْمِهِ

**“மேலும் நாம் ஒவ்வொரு தூதரையும் அவர்களுடைய சமூகத்தாரின் மொழியைப் பேசக்கூடியவர்களாக அனுப்பியுள்ளோம்.”**

தற்காலத்தில் சீர்திருத்தம் மற்றும் வழிகாட்டுதல், சூஃபித்துவம் மற்றும் சுலூக் உடைய உபதேசங்கள், அதே போல் மார்க்கத்தின் அனைத்து துறைகளிலும் பேச்சு மற்றும் எழுத்தின் மூலமாக நடைபெறும் சேவைகள் அனைத்தும் அவரவர்களுடைய பிராந்திய மொழியில் இருந்தாலே விரைவான தாக்கத்தையும், பொது அங்கீகாரத்தையும் பெறக் கூடியதாக இருக்கும்.

அவ்வகையில் தமிழ் மொழி என்பது மிகத் தொன்மையான மொழியாகும் . அதைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளவர்கள் உலகம் முழுவதும் அதிக எண்ணிக்கையில் பரவியுள்ளனர்.

சூஃபித்துவ ஞானங்கள் அனைத்தும் கிட்டத்தட்ட அரபு, பாரசீகம் மற்றும் உருது மொழிகளில் மட்டுமே உள்ளன.

தற்போதைய சுழலில், அல்லாஹ் நக்ஷ்பந்தி தரீக்காவின் மூலம் முழு உலகிலும் சீர்திருத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறான். தமிழ்நாட்டிலுள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல் இந்த மொழியைப் பேசக்கூடிய அல்லாஹ்வின் அடியார்கள் உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும் சரி அவர்களுக்கும் இந்த செயல் மிகப் பயனுள்ளதாகும்.

நமது அன்பான மௌலானா முஃப்தி ஷகீல் அகமது சாஹிப் நக்ஷ்பந்தி முஜத்திதீ அவர்கள் இந்த ஃபக்கீருடைய பல உபதேசங்களிலிருந்து முக்கியமான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றை தமிழில் மொழிபெயர்த்து, குறுகிய, பயனுள்ள துண்டுப்பிரசுரங்களாகவும் மற்றும் சிறு தொகுப்புகளாகவும் அச்சிட்டு ஆயிரக்கணக்கானோருக்கு விநியோகிப்பது ஒரு பெரிய பாக்கியமான காரியமாகும்.

மேலும் புனித ரமலான் மாதத்தில், இந்தத் தொகுப்புகள் தொடர்ந்து படிக்கப்பட்டு வருலதும் மிக மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். அல்ஹம்துலில்லாஹ், ஆயிரக்கணக்கான மக்கள் இதனால் பயனடைகிறார்கள்.

ஹஜ்ரத் அவர்களின் இந்த முயற்சி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று நான் அல்லாஹ்விடம் விஷேசமாக துஆ செய்கிறேன். அல்லாஹ் அவர்களை மன்னித்து, அவர்களுக்கு நன்மை மற்றும் மன்னிப்பற்குக் காரணமாக இதை ஆக்குவானாக.! ஆமீன்.

**பீர் துல்ஃபிகார் அஹ்மத் நக்ஷபந்தீ, முஜத்தீதி [ரஹ்]**

# ஹிஜாப் எனும் மங்கையர்க்கவசம்

அல்லாஹ் மனிதனை அனைத்து படைப்பினங்களையும் விட மிகச் சிறந்தவனாக ஆக்கியுள்ளான். மேலும் அவனுக்கு யாருக்கும் வழங்காத பகுத்தறிவின் ஒளியைக் கொடுத்துள்ளான். அவன் வழங்கிய செம்மையான அறிவின் காரணமாகவே, மனிதனுடைய வாழ்க்கைக்கும் விலங்குகளுடைய வாழ்க்கைக்கும் மத்தியில் மிகப் பெரும் வேறுபாடு தென்படுகிறது.

சாப்பிடுவது, குடிப்பது, துணையுடன் சேருவது மற்றும் குட்டிகளை ஈனுவதில் மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் மத்தியில் பெரிய வேறுபாடு எதுவுமில்லை.

அவ்வாறே கூடு கட்டி வசிப்பதிலும் இவ்விரண்டிற்கும் மத்தியில் குறிப்பிடத்தக்க வித்தியாசங்கள் இல்லை. ஆனாலும் மனித தேவைகள் மற்ற மிருகங்களை விட சற்று மிகுதியாக இருப்பதால் அவனுக்கு ஒரு ஆடம்பரமான வானளாவிய கட்டிடம் தேவைப்படுகிறது.

அதே நேரத்தில் விலங்குகளின் வாழ்க்கை எளிமையானது மற்றும் அவற்றின் வசிப்பிடமும் சாதரணமானது. உதாரணமாக ஒரு பறவை காலம் முழுக்க சிறிய கூட்டிலேயே வாழ்ந்து முடித்து விடும்.

அவ்வாறே ஒரு பாம்பு சிறிய புற்றிற்குள்ளே முடங்கி இருந்து கொள்ளும். காட்டில் வாழும் சிங்கமும் கூட சிறிய குகையிலே தன் ஆயுளைக் களித்துவிடும்.

சக பிராணிகளோடு கலந்து கூட்டாக வாழ்வதில் விலங்குகள் மனிதர்களை விட சளைத்ததல்ல. எறும்புகளின் வாழ்வு ஒற்றுமை, கூட்டுழைப்பிற்கான உயர்ந்த எடுத்துக்காட்டாகும்.

தேனீக்களைப் பொறுத்தவரை அவை ஆட்சித்தத்துவத்தை அடியொட்டியே வாழ்கின்றன.

பறவைகளின் வாழ்வில் அயராத திக்ரும், ஓயாத வழிபாடும் பிரதிபலிக்கிறது. இருப்பினும், மனிதர்களிடத்தில் விலங்குகளை விட மேன்மை கொண்ட ஒரு விஷயம் உள்ளதென்றால் அது வெட்கம் மற்றும் அடக்கம் என்ற குணம் மட்டுமேயாகும். இந்த குணத்தின் காரணமாகவே, மனிதர்கள் கற்பு மற்றும் தூய்மையான வாழ்க்கை வாழ்கிறார்கள். மேலும் தங்களுடைய எஜமானனுக்கு ஒவ்வொரு எட்டிலும் வழிபடுகிறார்கள்.

இந்த வெட்கம் மற்றும் ஒழுக்க குணம் தான் மனிதர்களை மற்றவர்கள் முன் தோன்றும் போது அவர்களுடைய அந்தரங்க உறுப்புகளை மறைக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறது. இதையே மனித வரலாற்றின் தொடக்க நிகழ்வுகளும் சுட்டிக் காட்டுகின்றன.

ஹஜ்ரத் ஆதம் ﷷ அவர்களுக்கும் அவர்களுடைய மனைவிக்கும் ஆரம்பமாக சொர்க்கத்தின் ஆடை அணிவிக்கப்பட்டிருந்தது. அவர்கள் தடைசெய்யப்பட்ட மரத்தின் பழத்தை சாப்பிட்டதும், அவர்களின் சொர்க்க ஆடைகள் கழற்றப்பட்டன. இருவரும் உடனடியாக மரத்தின் இலைகளால் தங்கள் அந்தரங்க உறுப்புகளை மூடிக்கொண்டனர்.

அல்லாஹ் கூறுகிறான்

وَ طَفِقَا يَخْصِفَانِ عَلَيْهِمَا مِنْ وَرَقِ الْجَنَّةِ

**மேலும் அவர்கள் இருவரும் சுவனத்தின் இலைகளைத் தங்கள் மீது ஒட்ட ஆரம்பித்தனர்.**

# மறைவிடத்தை மறைத்தலின் பின்னணி

“உடலில் மறைக்கப்பட வேண்டிய பாகங்களை மறைப்பதற்கு அரபியில், “அவ்ரத்” என்றும் உருது மற்றும் பார்சி மொழியில் “சதர்” என்ற வார்த்தையும் பயன்படுத்தப்படுகிறது.

ஹஜ்ரத் ஆதம் عليه السلام அவர்களின் சந்ததிகள் கற்காலத்திலிருந்தே தங்கள் அந்தரங்க உறுப்புக்களை மறைத்து வருகின்றனர். காலப்போக்கில், அறிவும், புரிந்துணர்வும் முதிர்ச்சியடைந்து, மனிதன் சமூக ஒழுக்கத்தையும், பண்பாட்டு விழுமியங்களையும் தன்னகத்தே ஏற்றுக்கொண்டபோது, அவனுடைய ஆடைகளில் மேலும் கூடுதல் சீரமைப்பும், நேர்த்தியும் தென்படத்தொடங்கியது.

எனவேதான் உலகில் தோன்றிய அனைத்து மதங்களும் மனிதனுக்கு ஒழுக்கமான ஆடைகளை அணியக் கற்றுக் கொடுத்துள்ளன. கிறித்துவ மதத்தில் ஒரு பெண்ணின் ஆடையை கவனித்தால் அவள் தனது மறைவிடங்களை மறைப்பது மட்டுமல்லாமல் கைகள், கால்கள் மற்றும் முகத்தைத் தவிர உடலின் மற்ற பகுதிகள் அனைத்தையும் ஆடைகளால் மூடி இருத்தல் அவசியம் என்பதை அறிய முடிகிறது.

தேவாலயத்தில் தங்கியிருக்கும் கிறிஸ்தவப் பெண்கள் இன்றளவும் அதே ஆடைகளை அணிந்திருப்பதைக் காணலாம். உடல் ரீதியாகவும், அறிவு, சிந்தனை ரீதியாகவும், சட்ட ரீதியாகவும், ஒவ்வொரு கோணத்திலும் அந்தரங்க உறுப்புகளை மறைப்பது கட்டாயம் என்பது அறியப்படுகிறது.

எனவே தான் அனைத்து நபிமார்களின் ஷரீஅத்திலும் இது ஒரு கட்டாயக் கடமையாக இருந்துள்ளது.

## ஹிஜாபின் பின்னணி

இஸ்லாமிய மார்க்கம் ஒரு முழுமையான மற்றும் பரிபூணமான வாழ்க்கை நெறிமுறையாகும். எனவே இஸ்லாமிய மார்க்கம் ஒழுக்கம் மற்றும் வெட்கத்தை ஈமானின் ஒரு பகுதியாக அறிவித்துள்ளது. சமூகத்திலிருந்து நிர்வாணமும், ஆபாசமும் முற்றிலுமாக துடைத்தெறியயப்பட வேண்டும் என்பதற்காகவே வெட்கம் மற்றும் ஒழுக்கமிக்க வாழ்க்கையை இஸ்லாமிய மார்க்கம் அதிகம் வழியுறுத்துகிறது.

இஸ்லாமிய மார்க்கம் விபச்சாரத்தைத் தடை செய்துள்ளது. எனவே அது

وَ لَا تَقْرَبُوْا الزِّنَا

“விபச்சாரத்தின் அருகில் கூடச் செல்ல வேண்டாம்” என்று கூறியுள்ளது. நபி ﷺ அவர்களின் இந்த ஷரிஅத்தானது இறுதித் தீர்ப்பு நாள் வரை மனிதர்கள் அதனுடைய பரிசுத்தமான ஊற்றிலிருந்து பயனடைய வேண்டும் என்று விரும்புகிறது. எனவே, இதில் ஹரமாக்கப்பட்ட காரியங்களின் வழிமுறைகளையும் சேர்த்தே ஹராமாக்கப்பட்டுள்ளது. மேலும் சைத்தான் நுழைவதற்கான அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக, மதுவைத் தடைசெய்தபோது, அதை தயாரிப்பது, விற்பது, வாங்குவது மற்றும் யாருக்கும் அன்பளிப்பாக கொடுப்பதையும் தடைசெய்துள்ளது. அவ்வாறே வட்டியைத் தடைசெய்தபோது, ஊழல்,

ஏமாற்றம் நிறைந்த பரிவர்த்தனைகளிலிருந்து கிடைக்கும் லாபத்தையும் வட்டியைப் போன்றே தீய செல்வமாக மாற்றியது. மேலும் பல தெய்வ வழிபாட்டைத் தடைசெய்தபோது, உருவப்படங்கள் வரைவது மற்றும் சிற்பங்களைச் செதுக்குவது போன்றவற்றையும் தடைசெய்துள்ளது.

விபச்சாரத்தைத் தடைசெய்தபோது, அந்நியப் பெண்களைப் பார்ப்பது, தொடுவது, காமத்துடன் பேசுவது மற்றும் மனதில் கற்பனையான தீய எண்ணங்களை தேக்கி வைப்பதையும் ஹராமாக்கிவிட்டது.

எனவே ஒரு பெண் பர்தா இல்லாமல் வெளிப்படுவதே விபச்சாரத்திற்குக் காரணம் என்பது நன்கு தீர்மானிக்கப்பட்ட உண்மையாகும். இதனால்தான் இஸ்லாம் பெண்களுக்கு பர்தா அணிய உத்தரவிட்டுள்ளது.

புனித ஆன்மாக்கள் தாங்களாகவே ஹிஜாபின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டன என்பதை பின்வரும் சம்பவத்திலிருந்து அறியலாம்.

ஹிஜ்ரி 5ல், ஹஜ்ரத் உமர் ﵁ அவர்கள் நபி ﷺ அவர்களிடம்,

يَا رَسُوْلَ اللهِ صلى الله عليه وسلم اِنَّ نِسَائَكَ يَدْخُلُ عَلَيْهِنَّ الْبَرَّ وَ الْفَاجِرَ فَلَوْ حَجَبْتَهُنَّ فَاَنْزَلَ اللّٰهُ اٰيَةَ الْحِجَابِ

"யா ரஸூலல்லாஹ்! தங்களுடைய மனைவியர்களின் முன்னிலையில் நல்லோர்களும், நல்லோர் அல்லாதவர்களும் வந்து செல்கிறார்கள். எனவே அவர்கள் தங்களை பர்தா

மூலம் மறைத்துக் கொள்ள தாங்கள் உத்தரவிடலாமே என்று கூறிய போது மேற்கூறப்பட்ட இவ்வசனம் அருளப்பட்டது.

ஹஜ்ரத் முஹம்மது முஃப்தி ஷாஃபி ﵀ அவர்கள் மஆரிஃபுல்-குர்ஆன் என்ற விரிவுரையில் பர்தா சம்பந்தமாக புனித குர்ஆனில் ஏழு வசனங்களும், நபி ﷺ அவர்களின் எழுபது ஹதீஸ்களும் இருப்பதாக எழுதியுள்ளார்கள்.

ஹிஜாப் என்பது ஒரு பெண் முடிந்தவரை தன்னுடைய வீட்டிலேயே இருப்பதையும், சில தேவைகளின் காரணமாக வெளியே சென்றால் தனது உடலையும், அலங்காரத்தையும் அந்நிய ஆண்களின் பார்வையிலிருந்து புர்காவால் மறைத்துக் கொள்வதற்குமே கூறப்படும்.

## மறைவிடத்தை மறைப்பது மற்றும் ஹிஜாப் அணிவதற்கு மத்தியில் ஒப்பீடு

மறைவிடத்தை மறைப்பது அதாவது அந்தரங்க உறுப்புகளை மறைப்பது மற்றும் ஹிஜாபின் மூலம் முழு உடலையும் மறைப்பது இரண்டும் தனித்தனியான விஷயங்களாகும். இவற்றிற்கு மத்தியில் ஒப்பீடு பின்வருமாறு:

1. மறைவிடத்தை மறைப்பது அனைத்து ஷரியத்துகளிலும் கட்டாயமாக்கப்பட்டதாக இருந்தது.
2. மறைவிடத்தை மறைப்பது தனிமையிலும், பொதுவெளியிலும் அவசியமானதாகும்.
3. மறைவிடத்தை மறைப்பது ஆண்கள், பெண்கள் இரு சாராருக்கும் கட்டாயமானதாகும்.

4. மறைவிடத்தை மறைப்பது வெட்கம் மற்றும் ஒழுக்கத்தின் தொடக்கமாகும்.

1. ஹிஜ்ராவின் ஐந்தாம் ஆண்டில் தான் இந்த சமூகத்திற்கு ஹிஜாபின் கட்டளை அருளப்பட்டது.
2. அந்நிய ஆண்களுக்கு முன்னால் பெண்கள் ஹிஜாப் அணிவது கட்டாயமாகும்.
3. ஹிஜாபின் கட்டளை பெண்களுக்கு மட்டுமேயாகும்.
4. ஒரு பெண்ணின் ஹிஜாப் வெட்கம் மற்றும் ஒழுக்கத்தின் உச்சமாகும்.

## ஹிஜாபிற்கான வாதங்கள்

இன்றைய அறிவியல் யுகத்தில், ஒருபுறம், பொருளாதார முன்னேற்றம் உச்சத்தில் உள்ளது. மறுபுறம், நிர்வாணம் மற்றும் ஆபாசத்தின் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. மேற்கத்திய நாகரிகத்தின் விளைவாக அத்துமீறிய நாகரீக மோகமும், வெட்கக்கேடும் பொதுவானதாக ஆகிவிட்டன.

இதன் விளைவாக கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் படிக்கும் முஸ்லிமான பெண்களும் கூட ஹிஜாப் அணிவதை அவசியமற்றதாகக் கருதத் தொடங்கியுள்ளனர். எனவே, குர்ஆன் மற்றும் சுன்னாவின் வெளிச்சத்தில் ஹிஜாபின் முக்கியத்துவத்தையும், கடமையையும் விளக்குவது அவசியமாக இருக்கிறது.

### 1.புனித குர்ஆனுடைய ஆதாரங்கள்.

1. அல்லாஹ் கூறுகிறான்:

و قرن فِيْ بُيُوْتِكُنَّ وَلَا تَبَرَّجْنَ تَبَرَّجَ الْجَاهِلِيَّةِ الْاُوْلَي

**அறியாமை காலத்தில் பர்தாயின்றி உடலைக் காட்டிக் கொண்டு திரிந்தது போல் இல்லாமல் உங்கள் வீடுகளிலேயே இருங்கள்.**

இந்த வசனத்தில், பெண்கள் பொதுவாக தங்கள் வீடுகளிலேயே தங்கி, அதன் நான்கு சுவர்களுக்குள் தங்களுடைய தார்மீகக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளார்கள்.

நான்கு சுவர்களை விட்டு வெளியேற வேண்டிய எந்த வேலையையும் ஷரியத் ஒரு பெண் மீது திணிக்கவில்லை. ஏதேனும் தற்காலிக அவசியத் தேவை நிமித்தம் வெளியேறினால் அது ஒரு நிர்பந்தம் மற்றும் இயலாமையில் உள்ளதாகும். இருப்பினும், ஒரு பெண் வீட்டிற்குள் எவ்வளவு அதிகம் இருப்பாளோ, அவ்வளவே அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெருவாள் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளது.

اَقْرَبُ مَا تَكُوْنُ مِنْ وَجْهِ رَبِّهَا وَ هِيَ فِيْ قَعْرِ بَيْتِهَا

ஒரு பெண் தன் வீட்டில் உள் அறையில் இருக்கும்போது தான் அல்லாஹ்விற்கு மிக நெருக்கமாக இருப்பாள் என்று ஒரு ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தப்ரானி ஷரீஃபுடைய ஒரு அறிவிப்பில்,

لَيْسَ لِلنِّسَاءِ نُصِيْبُ فِيْ الْخُرُوْجِ اِلَّا مُضْطَرَّةً

நபி ﷺ அவர்கள் “ஒரு பெண் நிர்பந்த காரணங்களுக்காக மட்டுமே தனது வீட்டை விட்டு வெளியேற வேண்டும்” என்று கூறியதாக வந்துள்ளது. எனவே மிக நிர்பந்த காரணத்திற்காக மட்டுமே ஒரு பெண் தனது வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவாள்.

ஒரு அரபு பழமொழியில்

لَا تَحْفَظُ الْمَرْأَةُ اِلَّا فِيْ بَيْتِهَا

**ஒரு பெண் தன் வீட்டைத் தவிர வேறெங்கும் பாதுகாப்பாக இருக்க முடியாது என்று கூறப்பட்டுள்ளது.**

நபி ﷺ அவர்களின் மனைவிமார்கள் ஊரில் இருக்கும் போது வீட்டின் நான்கு சுவர்களுக்குள்ளும், பயணத்தின் போது கூடாரங்களிலும், பல்லக்கிற்குள்ளும் தான் பெரும்பாலும் இருப்பார்கள்.

அன்னை ஆயிஷா ؓ அவர்கள் மீது வீண் பழி சுமத்திய சம்பவம் நடந்ததற்கான காரணங்களில் ஒன்று, அன்னை ஆயிஷா ؓ அவர்கள் தொலைந்து போன தன்னுடைய மாலையைத் தேடுவதற்காக சுய தேவையை நிறைவேற்றி வந்த இடத்தை நோக்கிச் சென்றுவிட்டார்கள். ஆனால் அவர்கள் பல்லக்கில் இருப்பதாக நபித் தோழர்கள் எண்ணிக் கொண்டு பல்லக்கை சுமந்து சென்று விட்டனர்.

இந்த வசனம் பெண்கள் ஆரம்ப அறியாமைக்காலத்தைப் போன்று தங்களுடைய உடல் பாகங்களை மறைக்காமல் திரியக்கூடாது என்றும் கட்டளையிட்டுள்ளது. விசித்திரமான விஷயம் என்னவென்றால், இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களில், பெண்கள் தங்களுடைய உடலை மறைக்காமல் சுற்றித் திரிந்ததற்கு முதல் இருண்ட கால மடமைத்தனம் தான் பிரதான காரணமாக இருந்தது.

அவ்வாறே இக்கால ஒழுக்கமற்ற ஆபாச சூலமுக்கும் நவீன கால மடமைத்தனமே காரணமாக அமைந்துள்ளது. சில ஆங்கிலக் கல்வி கற்ற பெண்கள் பர்தா அணிவதை எதிர்ப்பதன் மூலம் தங்களை மெத்தப் படித்தவர்கள் என்பதை நிரூபிக்க முயல்கின்றனர்.

2. அல்லாஹ் கூறுகிறான்:

وَ إِذَا سَاَلْتُمُوْهُنَّ مَتَاعًا فَاسْئَلُوْهُنَّ مِنْ وَرَاءِ الْحِجَابِ
ذَالِكُمْ اَقْسَطُ لِقُلُوْبِكُمْ وَ قُلُوْبِهِنَّ

**அல்லாஹ் கூறுகிறான்: நீங்கள் அவர்களிடம் ஏதாவது கேட்கும்போது, திரைக்குப் பின்னாலிருந்து கேளுங்கள். அது உங்களுடைய, மேலும் அவர்களுடைய உள்ளங்கள் தூய்மையாக இருப்பதற்கு மிக உகந்ததாகும்.**

நபி ﷺ அவர்களின் தோழர்கள் அன்னாருடைய மனைவியரிடம் ஏதாவது கேட்க வேண்டியிருந்தால், திரைக்குப் பின்னாலிருந்து தான் கேட்க வேண்டும். அதாவது, நான்கு சுவர்களின் திரை இல்லை என்றால், நிச்சயமாக ஒரு ஆடையின் திரையாவது இருக்க வேண்டும். ஒரு போதும் அவர்களை நேருக்கு நேர் சந்திப்பது அனுமதிக்கப்படாது என்று இந்த வசனம் கற்பிக்கிறது.

ஒரு பக்கம் நபி ﷺ அவர்களின் தோழர்களைப் போன்ற புனிதர்களும், மறுபுறம் நபி ﷺ அவர்களின் மனைவிமார்களைப் போன்ற தூய பெண்களுமே உள்ளனர். இவ்வாறு இருந்தபோதிலும், அவர்களுடன் திரைக்குப் பின்னாலிருந்து தான் பேச வேண்டும் அல்லது வேறு கொடுக்கல், வாங்கலில் ஈடுபட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருப்பதை இங்கே மிக முக்கியமாக நாம் கவனிக்க வேண்டும்.

இதுவே உங்களுடைய உள்ளங்களின் தூய்மைக்கும், அவர்களுடைய உளப்பரிசுத்தத்திற்கும் பொருத்தமானது என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

3. அல்லாஹ் கூறுகிறான்:

يَا اَيُّهَا النَّبِيُّ قُلْ لِاَزْوَاجِكَ وَ بَنَاتِكَ وَ نِسَاءِ الْمُؤْمِنِيْنَ يَدْنَيْنِ عَلَيْهِنَّ مِنْ جَلَّابَيْبِهِنَّ

**அல்லாஹ் கூறுகிறான்: நபியே! உங்கள் மனைவியர், மகள்கள் மற்றும் முஸ்லிமான பெண்கள் தங்கள் முக்காடுகளைத் தங்கள் மீது போட்டுக்கொள்ளச் சொல்லுங்கள்.**

ஜலாபிப் என்பது அரபு மொழியில் ஜில்பாப் என்பதன் பன்மையாகும். இது பெண்ணுடைய தலையில் அணியும் முக்காட்டைக் குறிக்கிறது. அவர்களுடைய முக்காட்டிலிருந்து என்று கூறப்பட்டதில் பயன்படுத்தப்பட்டுள்ள யு மின் என்ற வார்த்தை முக்காட்டுத் துணியின் சில பகுதியாவது முகத்தை மறைக்குமாறு தொங்கவிட வேண்டும் என்று தெரிகிறது.

அப்போது தான் மக்கள் அவளை ஒரு கண்ணியமான பெண்ணாக அங்கீகரிப்பார்கள். மேலும் அவளை யாரும் துன்புறுத்தமாட்டார்கள். அதாவது, எந்த நயவஞ்சகனோ அல்லது கெட்டவனோ அவளை கேலி செய்ய மாட்டான்.

ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ﷺ அவர்கள் “முஸ்லிம் பெண்கள் தங்கள் தலையையும், முகத்தையும் முக்காடுகளால் மறைக்க வேண்டும். நடக்கவும், பார்க்கவும் எளிதாக இருக்கும் வகையில் ஒரு கண்ணை மட்டும் திறந்து வைக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளனர்”. என்று கூறினார்கள். தற்போது நடைமுறையில் உள்ள புர்கா இந்த முக்காட்டுத் துணியை ஒத்ததாகும்.

4. அல்லாஹ் கூறுகிறான்:

وَ لَا يَبْدَيْنَ زِيْنَتَهُنَّ اِلَّا مَا ظَهَرَ مِنْهَا

**பெண்கள் தங்களுடைய மேம்போக்காகத் தெரியக் கூடியதைத் தவிர்த்து மற்ற அலங்காரங்களை வெளிப்படுத்த வேண்டாம்.**

அதாவது நிர்பந்த தேவைகளை முன்னிட்டு வெளியே தெரியக்கூடியதைத் தவிர்த்து மற்ற அலங்காரங்களை பெண்கள் பிற ஆண்கள் முன்னிலையில் வெளிப்படுத்தக் கூடாது. அலங்காரம் என்பது ஒரு நபர் தன்னை அழகாகவும், கவர்ச்சியாகவும் காட்டிக்கொள்ளப் பயன்படுத்தும் அனைத்தையும் குறிக்கிறது.

ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ﷺ அவர்கள் “வெளியே தெரியக்கூடியதைத் தவிர” என்ற வார்த்தைக்கு ஆடைகள், ஆபரணங்கள் அல்லது ஒப்பனைக்கான பொருட்களைக் குறிக்கிறது என்று கூறியுள்ளார்கள்.

இதற்கான சான்றுகள் புனித குர்ஆனின் வேறு வசனங்களின் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

அல்லாஹ் கூறுகிறான்:

خُذُوْا زِيْنَتَكُمْ عِنْدَ كُلِّ مَسْجِدٍ

**“ஒவ்வொரு தொழுகையின் போதும் உங்கள் அலங்காரத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.”**

இந்த வசனத்தில், அலங்காரம் என்பது ஆடைகளைக் குறிக்கிறது. மஸ்ஜித் என்பது தொழுகையைக் குறிக்கிறது என்று சிலர் விளக்கமளித்துள்ளனர்.

இந்த அர்த்தங்களின்படி, ஒரு பெண் தன்னுடைய ஆடைகள் மற்றும் நகைகள் என்ற செயற்கை அலங்காரங்களையே பிறருக்கு காண்பிக்கும் வண்ணம் அணியக்கூடாது என்றிருக்க பெண்ணின் பிரதான அழகாகத் திகலக்கூடிய முகத்தையும், வேறு உடல் உறுப்புகளையும் காண்பிப்பது அதைவிட பன்மடங்கு தடை செய்யப்பட்டதே என்பது நிரூபணமாகின்றது.

இவ்விஷயத்தில் புர்கா அல்லது ஆடைக்கு மேல் போர்த்தப்படும் போர்வைகள் போன்றவைகளை மறைப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பது மிகவும் தெளிவாகிறது. இது தவிர உள்ள மற்ற அனைத்து ஆடைகளையும், அலங்காரத்தையும் மறைப்பது கட்டாயமாகும்.

ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ﵄ அவர்கள் அலங்காரம் என்பது அலங்கரித்துக் கொள்ளக்கூடிய உடல் பாகங்கள் என்று பொருள் கொள்ளப்படும் என்கிறார்கள். எனவே ஒரு நீதிபதி முன், அல்லது நோய்க்கு சிகிச்சை பெறுவதற்காக மருத்துவரின் முன் அல்லது அடையாளம் காணுவதற்காக அல்லது சாட்சியம் அளிப்பதற்காக அல்லது இன்னபிற அவசிய நோக்கத்திற்காக மட்டுமே ஒரு பெண் தனது அலங்காரப் பகுதியை வெளிப்படுத்த அனுமதி உண்டு. ஒரு பெண்ணுடைய உடலில் அலங்காரப் பகுதிகள் என்பது முகம் மற்றும் உள்ளங்கைகளையே குறிக்கும் என்று கூறியுள்ளார்கள்.

ஒரு பெண்ணின் முகத்தைப் பார்க்கும்போது தவறான சிந்தனை எழுமானால் அவள் தன்னுடைய முகத்தை மூடுவதும், ஆண் அவளைப் பார்க்காமலிருப்பதும் கட்டாயமாகும் என்ற விஷயத்தில் அனைத்து அறிஞர்களும் ஒருமித்துள்ளனர்.

எனவே, ஒரு நீதிபதி அல்லது நடுவர் அடையாள நோக்கத்திற்காக அவற்றைப் பார்க்க வேண்டியிருந்தால், இச்சையுடன் இல்லாத முதல் பார்வை அவர்களுக்கு அனுமதிக்கப்படும். ஆனால் அவர்களுக்கும் தேவையின்றி அவளை மறுமுறைப் பார்ப்பது ஹராமாகும்.

5. அல்லாஹ் கூறுகிறான்:

وَ الْقَوَاعِدُ مِنَ النِّسَاءِ اللَّاتِيْ لَا يَرْجُوْنَ نِكَاحًا فَلَيْسَ عَلَيْهِنَّ جُنَاحٌ أَنْ يَضَعْنَ ثِيَابَهُنَّ غَيْرَ مُتَبَرِّجَاتٍ بِزِيْنَةٍ وَ اَنْ يَسْتَعْفِفْنَ خَيْرٌ لَهُنَّ وَ اللهُ سَمِيْعٌ عَلِيْمٌ

**மேலும், வீட்டிலேயே முடங்கியிருக்கும், திருமணத்தில் எவ்வித எதிர்பார்ப்புமில்லாத வயதான பெண்கள், தங்களுடைய முக்காடுகளைக் கழற்றுவதில் எந்த குற்றமும் இல்லை. அதற்கென தங்களுடைய அலங்காரத்தை பிறருக்கு காட்டிக் கொண்டு திரிய வேண்டும் என்று அர்த்தமில்லை. அவர்கள் இதையும் தவிர்த்தல் மிக நல்லதாகும். அல்லாஹ் எல்லாவற்றையும் கேட்பவனாகவும், அறிபவனாகவும் இருக்கிறான்.**

திருமணம் செய்து கொள்ளத் தகுதியற்றவர்களாகவோ அல்லது ஆண்கள் அவர்களை விரும்பாதவர்களாகவோ இருக்கக்கூடிய வயோதிகப் பெண்களுக்கு பர்தா அணிவதில் இலேசான வசதி அளிக்கப்பட்டுள்ளது. ஒரு பெண் தனக்கு மஹ்ரமாக இருக்கின்ற ஆண்களுக்கு முன்னால் எந்தெந்த உடல் பாகங்களை மறைக்கத் தேவையில்லையோ அது போன்றே இந்த வயோதிகப் பெண்களும் பிற ஆண்களின் முன் மறைக்கத் தேவையில்லை.

மேலும் இந்த வசனம் அவ்வகையான பெண்களும் மேக்கப் அணிந்து பொது இடங்களில் உலாவரக்கூடாது என்ற கட்டுப்பாட்டை விதித்துள்ளது. மேலும் மஹ்ரம் அல்லாதவர்கள் முன் தோன்றுவதைத் தவிர்ப்பதே நல்லது என்றும் அவர்களுக்குக் கூறப்பட்டுள்ளது. கேீழே கிடக்கின்ற ஒவ்வொரு பொருளுக்கும் உரிமை கொண்டாடுகிறவர் யாராவது இருக்கத்தான் செய்வார்யுஎன்பது ஒரு பழமொழியாகும்.

ஒரு வயதான பெண்ணுக்கே இவ்வளவு எச்சரிக்கைகள் வழங்கப்பட்டிருக்கும் போது, ஒரு இளம் பெண் தனது முக்காடு குறித்து எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும் என்பதை சிந்திப்பது அவசியமாகும்.

6. அல்லாஹ் கூறுகிறான்:

اَلْمَالُ وَ الْبَنُوْنَ زِيْنَةَ الْحَيَاةِ الدُّنْيَا

**அல்லாஹ் கூறியுள்ளான்: செல்வமும் பிள்ளைகளும் இவ்வுலக வாழ்வின் அலங்காரங்களாகும்."**

இந்த வசனத்தில், செல்வத்தையும் ஆண் பிள்ளைகளையும் இவ்வுலக வாழ்வின் அலங்காரங்கள் என்று கூறப்பட்டுள்ளது. இதில் பெண் பிள்ளைகளை வெளிப்படையாக கூறப்படாத காரணம் அவர்கள் மறைக்கப்பட வேண்டியவர்கள் என்பதினாலும் அவர்களின் அழகு மறைந்திருப்பதிலே தான் இருக்கிறது என்பதை உணர்த்துவதற்கேயாகும். இதன் மூலமாகவும் ஒரு பெண் தனது திரைக்குள் மறைந்திருக்க வேண்டியவள் என்பது நிரூபிக்கப்படுகிறது.

எனவே, முஸ்லிமான பெண்கள் பர்தா அணிவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மேலும் ஹிஜாபை

விடுவதால் ஏற்படும் தண்டனை இறங்கும் முன் ஹிஜாப், ஹிஜாப் என்ற சிந்தனையிலேயே மூழ்க வேண்டும்.

**2. ஹதீஸ்களிலிருந்து பர்தாவிற்கான ஆதாரங்கள்**

ஹாஃபிழ் இப்னு கசீர் ﵀ அவர்கள் தன்னுடைய விளக்கவுரையில், ஒரு நல்லொழுக்கமுள்ள மற்றும் கண்ணியமான பெண்ணின் அடையாளம் முக்காடு அணிவதாகும் என்று எழுதியுள்ளாரகள். அதனால் தீய எண்ணம் கொண்டவர்களும், பாவிகளும் அவளைத் துன்புறுத்த முன்வர மாட்டார்கள்.

اَمَرَ اللّٰهُ نِسَاءَ الْمُؤْمِنِيْنَ اِذَا خَرَجْنَ مِنْ بُيُوْتِهِنَّ فِيْ
حَاجَتِهِنَّ اَنْ يُغْطِيْنَ وُجُوْهَهُنَّ مِنْ فَوْقِ رُؤُوْسِهِنَّ
بِالْجَلَابِيْبِ وَيَبْدَيْنَ عَيْنًا وَّاحِدَةً

ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் ﵁ அவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ள ஒரு அறிவிப்பில் “முஃமினான பெண்கள் எந்த காரணத்திற்காக வீட்டை விட்டு வெளியேறினாலும் அவர்கள் முகங்களை ஒரு முக்காடு போட்டு மூடிக்கொண்டு ஒரு கண் மட்டும் திறந்திருக்கும் வண்ணம் வெளியேற வேண்டும்” என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான் என்று வந்துள்ளது.

மேலும் இது பர்தா இல்லாமல் வெளியேறுவது கண்ணியமான மற்றும் வெட்கமுள்ள பெண்களின் செயலல்ல என்பதையும் சுட்டிக் காட்டுகிறது.

1. நபி ﷺ அவர்கள்,

اَلْمَرْأَةُ عَوْرَةٌ

“ஒரு பெண் முழுமையாக மறைக்கப்பட வேண்டியவளாக இருக்கிறாள்” என்று ஒரு ஹதீஸில் கூறப்பட்டுள்ளது. எனவே மஹ்ரம் அல்லாத ஆண்களிடமிருந்து தன்னை மறைத்துக் கொள்வது ஒரு பெண்ணின் தார்மீகப் பொறுப்பாகும்.

அவள் வீட்டிற்குள் இருக்கும் போது எந்த ஆணும் அவளுடைய அளவு, தோற்றம், அவளுடைய நடத்தை போன்றவற்றைப் பார்க்க முடியாது என்பதைப்போல் வெளியே செல்லும் போதும் தன்னைப் பற்றி அறிய முடியாதபடி முழுவதுமாக மறைத்துக் கொண்டு வெளியே செல்வது விரும்பத்தக்கதாகும்.

ஏதேனும் மார்க்கத் தேவையின் காரணமாக அவள் வெளியே செல்ல வேண்டியிருந்தாலும் தன் உடலையும், ஆடைகளையும் ஒரு முக்காடு அல்லது பர்தா போன்றவற்றால் மறைத்தே வெளியேற வேண்டும். இதனால் ஒரு சுயநலவாதி அவளைப் பார்த்து அவளுடைய மானத்தைக் கெடுக்கத் திட்டமிட முடியாது.

2. ஹஜ்ரத் அலி ﵁ அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் ஒரு தடவை நபி ﷺ அவர்களின் சபையில் இருந்தேன். அப்போது அன்னாரைச் சுற்றி அமர்ந்திருந்த தோழர்களிடம் பெண்களுக்கு சிறந்த விஷயம் எது ? என்று நபி ﷺ அவர்கள் கேட்டார்கள். நபித் தோழர்களில் எவரும் எந்த பதிலையும் சொல்லாமல் அமைதியாக இருந்தார்கள். இதற்கிடையில், நான் வீட்டிற்குச் செல்ல வேண்டியிருந்தது. நான் பாத்திமா ﵂ அவர்களிடம் அதே கேள்வியைக் கேட்டேன்.

خَيْرٌ لَّهُنَّ اِلَّا يَرَيْنَ الرِّجَالُ وَلَا يَرَوهُنَّ

எந்தப் பெண் பிற அந்நிய ஆண்களைப் பார்க்காமலும் மேலும் ஆண்கள் தன்னைப் பார்க்க சந்தர்ப்பத்தை ஏற்படுத்தாமலும் இருப்பாளோ அதுவே ஒரு பெண்ணிற்கு ஆக சிறந்த விஷயமாகும் என்று பதிலளித்தார்கள்.

இந்தப் பதிலை நான் நபி ﷺ அவர்களிடம் கூறினேன். நபி ﷺ அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்து,

اِنَّهَا بِضْعَةٌ مِنِّيْ

“அவள் என் உடலின் ஒரு சதைத்துண்டு” என்று கூறினார்கள்.

3. நபி ﷺ அவர்கள்,

اَلْحَيَاءُ مِنَ الْاِيْمَانِ

“வெட்கம் என்பது ஈமானின் ஒரு பகுதியாகும். பர்தா அணிவதின் நோக்கமும் வெட்க உணர்வைத் தக்கவைப்பதற்கேயாகும். இன்னும் வெட்கம் என்பது ஒரு பெண்ணின் இயல்பான சுபாவமுமாகும். ஒரு பெண் தன்னுடைய மனசாட்சிக்கு எதிராகச் செயல்படும்போது, அவள் வெட்கமற்றவளாகி, வெட்கம், மானத்தை ஒரேயடியாக மூட்டை கட்டி விடுவாள் என்பதை சொல்லத் தேவையில்லை.”

4. மற்றொரு ஹதீஸில் நபி ﷺ அவர்கள்,

اِذَا لَمْ تَسْتَحِيْ فَاعْمَلْ مَا شِئْتَ

“உனக்கு வெட்கமில்லையானால் நீ விரும்பியதைச் செய்து கொள்” என்று கூறினார்கள். வெட்கமின்மை தான் பர்தாயின்றி உலாவுவதற்குத் தூண்டுகிறது என்று

இதிலிருந்து தெரிகிறது. எனவே வெட்கம் என்ற மாபெரும் பாக்கியத்தை விட்டும் அல்லாஹ் யாரையும் அபாக்கியவான்களாக ஆக்காமலிருப்பானாக! ஆமீன்.

5. ஒரு ஹதீஸில், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்,

اِنَّ الْمَرْأَةَ عَوْرَةٌ فَاِذَا خَرَجَتَ اِسْتَشْرَفَهَا الشَّيْطَانَ

**"ஒரு பெண் முழுமையாக மறைக்கப்பட வேண்டியவளாக இருக்கிறாள். அவள் வீட்டை விட்டு வெளியேறும்போது, சைத்தான் அவளை உற்றுப் பார்க்கிறான்".**

இதற்கு இரண்டு அர்த்தங்கள் கொள்ளலாம். முதலாவது, சபிக்கப்பட்ட சைத்தான் அவள் வீட்டை விட்டு வெளியேறுவதைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறான்.

ஏனெனில் அப்போது தான் அவளை அந்நிய ஆண்கள் பார்ப்பதற்கும், அந்நிய ஆண்களை அவள் பார்ப்பதற்கும் சந்தர்ப்பம் ஏற்படும். சைத்தான் இந்தப் பெண்ணை தீய பார்வையில் சிக்க வைக்கிறான். அந்நிய ஆண்களை இவளுடைய வலையில் சிக்க வைக்கிறான்.

இரண்டாவது அர்த்தம், மனோ இச்சையைப் பின்பற்றி வாழக்கூடிய காம வெறி பிடித்த, சைத்தானிய சிந்தனை கொண்ட பலர், வீட்டை விட்டு வெளியே திரியக்கூடிய அவளை காமக் கண்களால் பார்க்கிறார்கள்.

அத்தகைய பொல்லாத ஒழுக்கக்கேடான, காம வெறியர்கள் மக்களிலுள்ள சைத்தானின் பிரதிநிதிகளாவர்.

எனவே அவர்கள் உற்றுப்பார்ப்பது சைத்தான் உற்றுப்பார்ப்பதைப் போன்றதாகும் என்றும் விளக்க மளித்துள்ளார்கள்.

6. நபி ﷺ அவர்கள்

مَا تَرَكْتَ بَعْدِي فِتْنَةٌ اَضَرُّ عَلَى الرِّجَالِ مِنَ النِّسَاءِ

**எனக்குப் பிறகு என் உம்மத்திலுள்ள ஆண்களுக்கு அவர்களில் உள்ள பெண்களை விட பெரிய சோதனையை நான் விட்டுச் செல்ல வில்லை என்று கூறியுள்ளார்கள்.**

பெண்கள் ஆண்களுக்கு மிகப்பெரிய சோதனை என்பதை இந்த ஹதீஸ் சுட்டிக்காட்டுகிறது.ஆக குழப்பம் ஏற்படும் என்ற அச்சத்தை முன்வைத்தே பர்தா கடமையாக்கப் பட்டுள்ளது என்பதை இதிலிருந்து அறியலாம்.எனவேதான் இனக்கவர்ச்சி இல்லாத வயோதிக பெண்மணிகளுக்கு மட்டும் அவர்களுடைய முகத்தை மறைக்கும் விஷயத்தில் சற்று சலுகை காட்டப்பட்டுள்ளது.

ஆனால் வாலிப பெண்களின் பால் ஆண்களுக்கு பெரும்பாலும் இயல்பான ஈர்ப்பு இருப்பதினால் அவர்கள் முழுமையாக தம்மை மறைத்துக்கொள்ள வேண்டும். ஏதேனும் நிர்பந்த தேவைக்காக வீட்டை விட்டு வெளியே கிளம்பினாலும் அவர்கள் பர்தா அணிந்தவாறே கிளம்ப வேண்டும். ஏனெனில் அவள் மூலமாக சைத்தான் வேறு ஆண்களை குழப்பத்தில் ஆழ்த்தி விடாமல் இருப்பதற்கு இதுவே பொருத்தமானது என்று சட்ட வல்லுநர்கள் எழுதியுள்ளனர்

7. இமாம் அஹ்மத் அவர்கள் அன்னை ஆயிஷா ؓ அவர்களிடத்திலிருந்து அறிவித்துள்ளார்கள்.

كُنْتُ اَدْخُلُ بَيْتِيْ الذي فِيْهِ رَسُوْلُ اللهِ صلى الله عليه وسلم وَاِنِّيْ وَاضِعٌ ثَوْبِيْ وَاَقُوْلُ اِنَّمَا هُوَ زَوْجِيْ وَاَبِيْ

நபி ﷺ அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட அறைக்குள் நுழைந்ததும், நான் எனது மேல் போர்வையை விலக்கிவிடுவேன். ஏனெனில் என் கணவரும், என் தந்தையும் மட்டுமே அங்கு அடக்கம் செய்யப்பட்டிருந்தனர். ஆனால் ஹஜ்ரத் உமர் رضي الله عنه அவர்கள் அதே இடத்தில் அடக்கம் செய்யப்பட்ட பிறகு, அல்லாஹ்வின் மீது சத்தியமாக, நான் வெட்கத்தின் காரணமாக முழுமையாக என்னை மறைத்துக் கொண்டே செல்பவளாக இருந்தேன். இது பர்தாவின் முக்கியத்துவத்தை உணர்த்த போதுமான ஆதாரமாகும்.

ஏனெனில் அன்னை ஆயிஷா رضي الله عنها அவர்கள் மண்ணில் புதைக்கப்பட்ட ஒரு அந்நிய ஆணிடத்திலிருந்தும் கூட ஒரு பெண் தன்னை மறைக்க வேண்டும் என்று வழிகாட்டியிருக்குப் போது இக்காலப் பெண்கள் உயிருள்ள ஆண்களுக்கு முன்னால் கூட பர்தா அணியாமல் இருந்தால் எவ்வளவு பெரிய கைசேதம் என்பதை யோசித்துக் கொள்ளுங்கள். அன்னை ஆயிஷா رضي الله عنها அவர்களின் இச்செயல் ஈமான் கொண்ட பெண்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகும்.

وَكَانَتْ حَفْصَةَ وَعَائِشَةَ رضي الله عنهمَا يومًا عِنْدَ النَّبِيِّ
صلى الله عليه وسلم جَالِسَتَيْنِ فَدَخَلَ ابْنُ اُمِّ مَكْتُوم رضي
الله عنه وَكَانَ اَعْمَي فَقَالَ النَّبِيِّ عَلَيْهِ السَّلَامِ اِحْتَجَبَا مِنْهُ
فَقَالَتْ يَا رسول الله اَلَيْسَ هُوَ اَعْمَى لَا يَبْصُرْنَا وَلَا يَعْرِفْنَا
فَقَالَ اَفَعَمَيَاوَاِنْ اَنْتُمَااَلَسْتُمَا تَبْصُرَانِهِ

8. ஒரு தடவை உம்முல்-முஃமினீன் ஹஃப்சா رضي الله عنها மற்றும் ஆயிஷா رضي الله عنها ஆகிய இருவரும் நபி ﷺ அவர்களிடத்தில்

அமர்ந்திருந்தனர். அப்போது ஹஜ்ரத் அப்துல்லா இப்னு உம்மி மக்தும் ﵁ அவர்கள் நபி ﷺ அவர்களின் வீட்டிற்குள் நுழைந்தார்கள். அவர் ஒரு பார்வையற்ற தோழராக இருந்தார். உடனே நபி ﷺ அவர்கள் அந்த இருவரிடமும் நீங்கள் இருவரும் பர்தாயிட்டுக் கொள்ளுங்கள்" என்று கூறினார்கள்.

"அல்லாஹ்வின் தூதரே, அவரோ குருடரல்லவா? அவரால் எங்களைப் பார்க்கவோ, அடையாளம் காணவோ முடியாதே" பிறகு நாங்கள் ஏன் பர்தாயிட வேண்டும் என்று அவர்கள் கேட்டனர். அதற்கு நபி ﷺ அவர்கள், நீங்கள் இருவரும் குருடர்களல்லவே? நீங்கள் அவரைப் பார்ப்பீர்களல்லவா?" என்று கேட்டார்கள். பர்தாவின் முக்கியத்துவத்திற்கு இதை விடத் தெளிவான, சிறந்த ஆதாரம் வேறு என்ன இருக்க முடியும்?

### 3. பகுத்தறிவு வாதங்கள்

### 1. எலுமிச்சை பழத்தைக் கண்டால் எச்சில் ஊரத்தானே செய்யும்.

ஒரு முதியவர் லாகூரிலிருந்து ஜீகபாபாத்திற்கு ரயிலில் சென்று கொண்டிருந்தார். வழியில், ஒரு ரயில் நிலையத்தில், கோட் மற்றும் பேண்ட் அணிந்திருந்த நவநாகரீக மோகம் கொண்ட இளைஞன் ஒருவன் ஏறினான். சிறிது நேரம் கழித்து, அந்த இளைஞன் முதியவரிடம், "நீங்கள் இஸ்லாமிய அறிஞர் போல் தெரிகிறது. நீங்கள் என்னை அனுமதித்தால், நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்?" என்றான். அதற்கு அந்த முதியவர், "ஆம், நீ கேட்கலாம்" என்றார். அந்த இளைஞன், "ஆண்களும் பெண்களும் ஒன்றாக வேலை செய்வதை இஸ்லாம் ஏன் அனுமதிக்கவில்லை?" என்று கேட்டான்.

குர்ஆன் மற்றும் ஹதீஸ்களின் வெளிச்சத்தில் அவர் அவனுக்கு பல பதில்களைக் கொடுத்தார். ஆனாலும் அந்த இளைஞனின் மனம் திருப்தி அடையவில்லை.பிறகு அவன் "இதில் என்ன தடை இருக்கிறது என்பதை நீங்கள் பகுத்தறிவு வாதங்களுடன் எனக்கு விளக்க முடியுமா" என்று கேட்டான்."

ஆண்களும், பெண்களும் ஒன்றாக வேலை செய்யும் போது, அவர்களுடைய உளளங்களில் ஒருவர் பிறரின் மீது ஈர்ப்பு உண்டாகும். அதனால் சந்தோஷமாக வாழ்ந்து வந்த பல குடும்பங்கள் கலையிழந்து விடும். திருமணமாகாத பல கன்னிப் பெண்கள் திருமணம் ஆகாமலேயே தாய்மார்களாக மாறிவிடுவார்கள். சமூகத்தில் குழப்பம் தலைவிரித்தாடும் என்று அதனால் ஏற்படும் பல மோசமான விளைவுகளைக் கூறினார்.

அதற்கு அந்த இளைஞன், "மக்கள் தங்கள் மனதைக் கட்டுப்படுத்தினால், கலப்புக் கல்வி மற்றும் கலப்பு வேலைகளில் எந்த தீங்கும் ஏற்படாதல்லவா" என்று கூறினான். இவன் மனரீதியாக குருடனாக இருக்கிறான். இவனுடைய அறிவில் திரை விழுந்திருக்கிறது. எனவே, நேரான விரலைக் கொண்டு நெய் எடுக்க முடியாது என்பதைக் கண்ட அந்த முதியவர் விரலை வளைத்தால் தான் எடுக்க முடியும் என்றெண்ணி அவனுக்கு இதை வேறு வழியில் விளக்க நாடினார்.

அவர் தன்னுடைய பாக்கெட்டில் ஒரு எலுமிச்சை வைத்திருந்தார். அதை எடுத்து, நான்கு துண்டுகளாக வெட்டி உறிஞ்ச ஆரம்பித்தார். அந்த இளைஞனும் வெப்பத்தின் தீவிரத்தால் ஏக்கக் கண்களால் அவரைப் பார்க்க ஆரம்பித்தான். "நீ என்ன பார்க்கிறாய்?" என்று கேட்டார்.

அதற்கு அவன் எலுமிச்சையைப் பார்த்தவுடன் என் வாயில் எச்சில் ஊறுகிறது என்றான். "மனதைக் கட்டுப் படுத்தலாம் என்று கூறிய யோசனை என்ன ஆனது?" என்று கேட்டார். எலுமிச்சையைப் பார்த்தாலே வாயில் எச்சில் ஊறும் என்பதைப் போல், ஒரு இளைஞன் அந்நியப் பெண்ணைப் பார்த்தாலே அவனுடைய உள்ளத்தில் பாவ உணர்வு ஏற்படத்தான் செய்யும். இதுவே விபச்சாரத்திற்குக் காரணமாகவும் அமைகிறது.

எனவே தான் இத் தீமையைத் தடுக்க, இஸ்லாம் பெண்களை முதலில் அவர்களுடைய வீட்டிலேயே இருக்க வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளது. ஏதேனும் தேவை காரணமாக அவர்கள் வெளியே செல்ல வேண்டியிருந்தால், ஆண்கள் அல்லாதவர்கள் பார்க்காமல் இருக்க, அவர்கள் எந்த பிரச்சனையிலும் மாட்டிக் கொள்ளாமல் இருப்பதற்காக ஒரு முக்காடு அணிந்து வெளியே செல்ல வேண்டும் என்று கூறியுள்ளது. இந்த பதில்கள் அனைத்தையும் கேட்ட அவன் வெட்கத்தில் தலை குனிந்தான்.

### 2.] பணத்தை பாதுகாப்பதை விட மானத்தை பாதுகாப்பது மிக மேலானது.

ஒரு நகரத்திலிருந்து இன்னொரு நகரத்திற்கு ஒரு இலட்சம் ரூபாயை டெலிவரி செய்யும் பணி ஒருவருக்கு வழங்கப்பட்டால், அவர் முதலில் இவ்வளவு பெரிய தொகையை எடுத்துச் செல்ல பயப்படுவார். ஏனெனில் வழியில் திருடர்கள் மூலமாக முழு பணமும் திருடப்பட்டு விடப்பட்டு விடலாம். அல்லது யாராவது ஒரு திருடன் அல்லது கொள்ளையடிப்பவனுக்கு இது தெரிந்து விட்டால் அவனைக் கொலை செய்து விட்டு அத்தனை பணங்களையும் சுருட்டிக் கொண்டு சென்றுவிடலாம் என்ற அச்சம் இருக்கும்.

எனவே யாரும் கண்டுபிடிக்காதபடி வங்கி போன்றவற்றின் மூலம் அதை மாற்றுவதே அவருக்கு நல்லது என்பதை எல்லோரும் அறிவோம். ஒரு வேளை பணத்தை அவரே தான் டெலிவரி செய்யவேண்டும் அதைத் தவிர வேறு வழியில்லை என்று கட்டாயப்படுத்தப்பட்டால், அந்த நபர் பணத்தை ஒரு உள் பாக்கெட்டிலோ அல்லது வேறு பாதுகாப்பான இடத்திலோ தான் மறைத்து எடுத்துச் செல்வார்.

மேலும் வழி முழுவதும் அதே சிந்தனையிலே தான் இருப்பார். ஸ்டேஷனில் உள்ளவர்கள் முன் வெளிப்படையாக அதை எடுத்து எண்ணிக் கொண்டிருக்க மாட்டார். யாராவது இவ்வாறு செய்தால் அது மடத்தனத்தின் உச்சகட்டமும், தனக்குத் தானே நஷ்டத்தை ஏற்படுத்த அழைப்புக் கொடுப்பதைப் போன்றதுமாகும் என்பதை அவர் நன்கு அறிவார்.

அவ்வாறே ஒரு நல்லொழுக்கமுள்ள பெண் தன்னுடைய வீட்டின் நான்கு சுவர்களைக் கடந்து வெளியே செல்ல நேர்ந்தால், முதலில் அவள் தேவையில்லாமல் வெளியேறுவதற்கே அஞ்சுவாள். நிர்பந்தம், தங்கடம் அல்லது அவசியத்தின் பேரில் வெளிய சென்றே ஆக வேண்டும் என்றிருந்தால் முழுமையாக பர்தா அணிந்து தன்னை மறைத்தவாறே வெளியேறுவாள். மேலும் அவள் வழிநெடுக்க துர்நடத்தை கொண்ட யாரும் தன்னைப் பின்தொடர்ந்து விடக் கூடாது என்ற எச்சரிக்கையுடனே தான் செல்வாள்.

இப்பேற்பட்டவள் அந்நிய ஆண்களின் சபையில் தன்னுடைய அலங்காரத்தை வெளிக்காட்டி, தன் மானத்தை தாமாக அடகு வைப்பாள் என்று ஒருபோதும்

யோசிக்க முடியாது. தீய எண்ணம் கொண்ட ஒருவன் அவளை பின் தொடர்வேனேயானால் அவளுடைய மானமும் பறிபோகிவிடும், சில வேளை அவளுடைய உயிரும் பறிபோகிவிடும் அபாயத்தை எக்காலத்திலும் மறக்காதவளாக இருப்பாள்.

எனவே தான் இஸ்லாமிய மார்க்கம் பெண்களின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் யாரும் கெடுத்து விடக்கூடாது என்பதற்காகவே பர்தா அணிவதை அவசியமாக்கியுள்ளது. தங்களை நாகரீக விரும்பிகள், சுதந்திரமானவர்கள் என்று பர்தா அணியாமல் கடைவீதிகளில் சுற்றித் திரியக்கூடிய பெண்கள் அவ்வப்போது கடத்தப்படும் சம்பவங்களை பத்திரிகைகளில் வரும் செய்திகள் மூலம் அறிய முடிகிறது.

அவர்கள் மற்றவர்களுடைய கண்களுக்கு தங்களை விருந்தாக்க எண்ணி அவர்களே விருந்தாக மாறிவிடக் கூடிய அவலத்தை யாரும் அறியாமலில்லை.

### 3.] கறிக்கே கவர் போடப்பட வேண்டுமானால் கன்கவர் உடலுக்கு திறை போட வேண்டாமா?

ஒரு நபர் கறிக் கடையிலிருந்து கொஞ்சம் கறி வாங்கினால் அதை ஒரு துணி அல்லது பை போன்றவற்றில் மறைத்தே வீட்டிற்கு எடுத்துச் செல்வார். மாறாக அந்த இறைச்சியை ஒரு தட்டில் வைத்து அந்தத் தட்டைத் தலையில் ஏந்திக்கொண்டு இறைச்சி வெளியே தெரியுமாறு சாலையில் நடந்து செல்ல விரும்ப மாட்டார்.

ஏனெனில் கழுகு, காகங்கள் போன்றவை அதை கவ்விக் கொண்டு சென்று விடும் என்ற அபாயமுள்ளது. அவ்வாறே, சுமார் ஐம்பது கிலோ எடையுள்ள ஒரு இளம் பெண்

வீட்டை விட்டு வெளியேறும் போது தன்னை பர்தாவின் மூலம் மறைக்காமல் இருந்தால் மனித உருவில் உள்ள ஓநாய்கள் அவளைச் சுற்றி வட்டமிடத் தொடங்கிவிடுவர். பல நேரங்களில் அந்த ஐம்பது கிலோவை முழுவதுமாக அபகரித்து அழித்துவிடுவர்.

அதனால்தான் நல்லொழுக்கமுள்ள பெண்கள் தங்களுடைய மானம், மரியாதை, உயிர், பொருள் மற்றும் நற்பெயருக்கு எந்தக் களங்கமும் ஏற்படாதவாறு பர்தாவின் மூலம் மறைத்துக்கொண்டு வெளியே செல்கிறார்கள்.

தங்கள் இளம் பிள்ளைகளை பர்தா இல்லாமல் வெளியே செல்ல அனுமதிப்பவர்கள், தங்களுடைய பிள்ளைகளின் மதிப்பு அவர்களின் பார்வையில் ஒரு சில கிலோ இறைச்சிக்கும் சமமாக இல்லை என்று சொல்லாமல் சொல்பவர்களைப் போன்றவர்களாவர்.

ஒரு பறவை எங்கிருந்தாவது இறைச்சியை எடுத்துச் சென்றால், இழப்பு உடமைக்கு மட்டுமே. அதை எப்படியாவது ஈடுசெய்து விடலாம். ஆனால் யாராவது உங்களுடைய மகளின் கற்புக்கு களங்கம் விளைவித்தால், அதன் இழப்பை யாராலும் ஈடுசெய்ய முடியாது என்பதை மறந்துவிட வேண்டாம். பிறகு கைமீறிய காரியம் கண்ணீர் விட்டால் வருமா? என்ற பழமொழிக்கேற்ப பரிதாப நிலை ஏற்பட்டு விடும்.

### 4] ரோஷமுள்ளவன் தன்னவளை பிறருக்கு விருந்தாக்க மாட்டான்.

இயற்கையாகவே ஒவ்வொரு மனிதனுக்கும் ரோஷ உணர்வு வழங்கப்பட்டிருக்கிறது. எனவே அவன் தன் குடும்பப் பெண்களை வேறு யாரும் தப்பான எண்ணத்தோடு பார்ப்பதை விரும்பமாட்டான். அவ்வாறே

அவன் தன் இரத்தபந்த உறவுக்கார பெண்களுடன் யாராவது தவறாக நடந்து கொள்வதையும் ஒருபோதும் பொறுத்துக்கொள்ளமாட்டான்.

சில சமயங்களில் ரோஷமுள்ள பலர் இது போன்ற தவறு செய்பவர்களைக் கொலை செய்யக்கூட தயங்குவதில்லை. இதனால் கணவன் தன் மனைவியை, தந்தை தன் மகளை, சகோதரன் தன் சகோதரியை, மகன் தன் தாயைக் கூட கொலை செய்யும் சம்பவங்களும் அவ்வப்போது நடைபெறுகின்றன. இதுபோன்ற செய்திகள் நாளிதழ்களில் அனுதினமும் வந்து கொண்டே தான் இருக்கின்றன.

ஒரு பெண்ணின் பர்தா அற்ற நிலை குடும்பத்திலுள்ள பலருடைய கௌரவங்களை குழி தோண்டி புதைத்து விடுகிறது. எனவே, தனி மனிதனுடைய ரோஷமும், ஈமானுடைய ரோஷமும் பெண்கள் ஹிஜாப் அணிந்து தான் வெளியேற வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. அவ்வாறே சமூகத்தில் குழப்பங்கள் பரவாமலிருக்க ஆண்களும் தங்களுடைய பார்வையை தாழ்த்திக் கொள்ள வேண்டும் என்று வழிகாட்டப்பட்டுள்ளனர்.

**5]. அறிவை விட உணர்வுகளுக்கு முன்னுரிமை அளிப்பதால் பெண்கள் குறைமதியாளர்கள்.**

நபி ﷺ அவர்கள் பெண்கள் சம்பந்தமாக கூறும்போது

نَاقِصَاتُ الْعَقْلِ وَدِيْنٌ

“அவர்கள் அறிவு மற்றும் ஆன்மீகம் அடிப்படையில் குறைபாடுடையவர்கள்” என்றார்கள். விரைவில் சறுகி விழுவதும், அவ்வாறே பிறரை சறுகவவைப்பதும் ஒரு பெண்ணின் இயல்பான சுபவமாகும். எனவே அவள்

சிறந்த அறிவுஜீவிகளைக் கூட நிமிடத்தில் தடுமாற வைத்துவடுவாள். அவளுடைய உணர்ச்சிவசப்படுதல் என்ற தன்மையினால், அவள் ஒரு பச்சோந்தி போன்று எப்போதும் மாறிக் கொண்டே நிலையற்றவளாக இருப்பாள்.

எனவே தான் ஷரியத்தானது விவாகரத்து உரிமையை ஆண்களின் கைகளில் தந்துள்ளது. ஒருகால் இவ்வுரிமை பெண்ணுக்கு வழங்கப்பட்டிருந்தால், அவள் ஒரு நாளில் எழுபது முறை விவாகரத்து செய்து மீண்டும் எழுபது முறை மீட்டுக் கொள்பவளாக இருந்திருப்பாள். அவள் ஒருவரிடம் மகிழ்ச்சியாக இருந்தால், தன்னிடம் உள்ள அனைத்தையும் அவனுக்காக அற்பணித்து விடுவாள். அவள் ஒருவரிடம் கோபமாக இருந்தால், அவன் உயிரோடு நன்றாக உலாவதைக் கூட பார்க்க விரும்பமாட்டாள்.

சில நேரம் தன் வீட்டிற்குள் எல்லா அத்துமீறல்களை தானே செய்து விட்டு வெளி உலகிற்கு அப்பாவியாக, தானே பாதிக்கப்பட்டவளாக காட்டிக் கொள்வாள். அவளுடைய உள்ளம் ஒன்றை விரும்பும். ஆனால் அவள் நாவால் அதை வேண்டாம் வேண்டாம் என்று மறுப்பாள்.

கணவனுடன் எப்போதாவது சிறிய மனக்கசப்பு ஏற்பட்டால், காலமெல்லாம் அவனிடம் கண்ட நற்பண்புகளை நிமிடத்தில் மறந்து விடுவாள். நான் உன் வீட்டிற்கு வந்த பின் என்ன சுகத்தைத் தான் கண்டுள்ளேன்."நீ என்ன செய்தாலும் உன் ஆதாயத்திற்காகவே செய்கிறாய். எனக்காக எதையுமே செய்யவில்லை" என்று கூறுவிடுவாள்.

மேலும் அவள் சாதாரண விஷயத்திற்கெல்லாம் சபிக்க ஆரம்பித்து விடுவாள். அவள் ஒரு வேளை முடியாதவளாக இருந்தால் விரைவாக தான் மரணமாக வேண்டும் என்று துஆ செய்ய தொடங்கி விடுவாள். அவளுக்கு செல்வத்தின்

மீதுள்ள தீராத பற்றினால், அவளுடைய கணவர் நான் உன் கையில் ஆணி அடிக்க விரும்புகிறேன். அதுவும் தங்க ஆணி அடிக்க விரும்புகிறேன் என்று கூறினால் உடனே ஏன் இன்னும் தாமதம் உடனடியாக ஆணி அடிக்க வேண்டியது தானே என்று ஆசைப்படுவாள்.

கோபம் மற்றும் பொறாமையின் நெருப்பால் கங்காக மாறி கொதித்துக் கொண்டே இருப்பாள். அவள் ஃபேஷனை மிகவும் விரும்புவாள். அதனால் வேறு யாரும் அணியாத ஆடைகளை தான் அணிய வேண்டும் என்று விரும்புவாள். ஒரு முறை ஆடை அணிந்தால் மறுமுறை அதை துவைத்து அணிய விரும்பமாட்டாள். அவற்றைக் கழற்றி வேறொருவருக்குக் கொடுத்து விட்டு புதிதாக வேறொன்றை வாங்க வேண்டும் என்று எண்ணுவாள்.

அவளை யாராவது பாராட்டினால், உற்சாகத்தை அடக்க முடியாதவளாக இருப்பாள். அவள் எதிரியை தன் நண்பனாகவும், அந்நியனை தன் சொந்தமாகவும் கருதத் தொடங்குவாள். இந்த ஏற்ற இறக்கமான சுபாவத்தின் காரணமாகவே அவளுடைய அறிவு முழுமையானதல்ல, அது குறைபாடுடையது என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, வீட்டின் நான்கு சுவர்களுக்குள் இருப்பதே அவளுக்கு நல்லது. ஒருவருக்கு பைத்தியம் பிடித்து விட்டால், அவரைப் பைத்தியக்கார விடுதியில் ஒரு அறையில் அடைத்து வைக்கப்படும். அவ்வாறே ஒரு பெண்ணும் அறிவு ரீதியாக குறைபாடுள்ளவளாக இருப்பதால் அவளையும் வீட்டின் நான்கு சுவர்கள் என்ற சற்று பெரிய இடத்தில் இருக்கக் கூறப்படுகிறது.

அவள் வெளியே செல்ல விரும்பினால், பர்தா அணிந்து ஒரு மஹ்ரமான ஆணுடன் தான் வெளியே செல்ல

வேண்டும். இதனால் யாருடைய இறை நம்பிக்கையும், மேலும் அவளுடைய மானம், மரியாதையும் சேதப்படக் கூடாது என்பதே நோக்கமாகும்.

## இஸ்லாம் கூறக் கூடிய பர்தாவின் மூன்று நிலைகள்

